# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

## படிவம் – II

**1974–ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (1974–ஆம் ஆண்டின் 6வது மத்திய அரசு சட்டம்) பிரிவு 25/26–ன் படி இசைவாணை பெறுவதற்கான விண்ணப்பம்.**

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

## படிவம் – II

**1974–ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (1974–ஆம் ஆண்டின் 6வது மத்திய அரசு சட்டம்) பிரிவு 25/26–ன் படி இசைவாணை பெறுவதற்கான விண்ணப்பம்.**

(1983–ஆம் ஆண்டின் தமிழ்நாடு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள் 26–ஐ பார்க்கவும்).

**(இரு பிரதிகளில் சமர்ப்பிக்க வேண்டும்)**

| | | |
|---|---|---|
| **1** | அ. விண்ணப்பதாரின் முழு பெயர்<br>(தொழிற்சாலைக்கு உரிமையாளர் / பொறுப்புடையவர்) | |
| | ஆ. பதவி | |
| | இ. அலுவலக முகவரி<br>(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) | |
| | ஈ. தொழிற்சாலை முகவரி<br>(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) | |
| | உ. தொலை பேசி எண் (தொலைதூர குறியீட்டுடன்) | |
| | ஊ. தொலை நகல் எண் (தொலைதூர<br>குறியீட்டுடன்) | |
| | எ. மின் அஞ்சல் குறியீடு (E-Mail) | |
| | ஏ. இணைய தள குறியீடு (Web site) | |
| **2** | தொழிற்சாலையின் முழு பெயர் மற்றும்<br>முகவரி | |
| **3** | தொழிற்சாலை இருப்பிடம்<br>அ. (நில அளவை எண்/<br>நகர அளவை எண்)<br>ஆ. கிராமம் / நகரம்<br>இ. வட்டம்<br>ஈ. மாவட்டம் | |

| | | |
|---|---|---|
| **4** | உள்ளாட்சி அமைப்பு<br>(மாநகராட்சி / நகராட்சி / நகர பஞ்சாயத்து / பஞ்சாயத்து ஒன்றியம் / பிற) | |
| **5** | நிலத்தின் அளவு (ஹெக்டேர்களில்)<br>அ. மொத்தம்<br>ஆ. கட்டுமான பகுதி பரப்பு<br>இ. திடக்கழிவு சேமிப்பு / வெளியேற்றும் பகுதி பரப்பு<br>ஈ. பசுமை வளையம் / பாசன பகுதி பரப்பு<br>உ. வெற்றிட பகுதி பரப்பு<br>{ அ – (ஆ+ இ+ஈ)} | சொந்தமானது / வாடகை நிலம் |

**6. பயன்படுத்தக்கூடிய மூலப்பொருட்கள் பற்றிய விவரம்**

| வ. எண் | மூலப்பொருட்களின் பெயர் | அளவு | மெட்ரிக் டன்/மாதத்தில் (அ) கிலோ லிட்டர் / மாதத்தில் (அ) எண்ணிக்கை / மாதத்தில் | முதன்மை உபயோகம் |
|---|---|---|---|---|
| | | | | |

**7 பயன்படுத்தபடும் எரிபொருளின் விவரம்.**

| வ. எண் | எரிபொருள் பெயர் | பயன்படுத்தப்படும் பகுதி | அளவு டன்/நாளொன்றுக்கு (அ) கிலோ லிட்டர்/ நாளொன்றுக்கு | வெப்ப மதிப்பீடு எண் | சாம்பல் அளவு | கந்தக அளவு |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

**8. உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விவரம்**

| வ. எண் | உற்பத்தி செய்யப்படும் பொருளின் பெயர் | அளவு | டன் / மாதம் (அ) கிலோ லிட்டர் மாதம் (அ) எண்ணிக்கை/மாதம் | இறுதி உபயோகம் |
|---|---|---|---|---|
| அ. | பிரதான உற்பத்தி பொருட்கள் | | | |
| ஆ. | உப உற்பத்தி பொருட்கள். | | | |
| இ. | இடை  நிலை உற்பத்தி பொருட்கள். | | | |

**9. உற்பத்தி செய்முறை**

**10. அ . பயன்படுத்தப்படும் நீரின் ஆதாரம்**

| | | |
|---|---|---|
| **ஆ** | நீரின் பயன்பாடு<br>கிலோலிட்டர் / நாளொன்றுக்கு | |
| | i. நீரின் பயன்பாடு I (குளிர்வித்தல் மற்றும் கொதிகலன் / நாளென்றுக்கு) | |
| | ii. நீரின் பயன்பாடு II (குடிமுறை உபயோகம்) | |
| | iii. நீரின் பயன்பாடு III (வினைமுறைக்கு  எளிதில் உயிரிவழி சிதைக்க கூடியது) | |
| | iv. நீரின் பயன்பாடு IV (வினைமுறைக்கு எளிதில் உயிர்வழி சிதையாமல் இருப்பது) | |
| | v. மொத்தம் | |

**11. அ. கழிவுநீர் / தொழிற்சாலை கழிவுநீர் உற்பத்தி மற்றும் வெளியேற்றம்.**

| வெளியேற்று வாய் எண் | வெளியேற்றுவாய் விவரம் (தொழிற்கழிவு நீர்/ கழிவு நீர்) குறிப்பிடவும் | அதிகபட்ச வெளியேற்றும் அளவு நாளொன்றுக்கு | வெளியேற்றம் நடக்கும் இடம் | ஒதுக்கப்பட்ட இட அளவு |
|---|---|---|---|---|
| | <u>கழிவுநீர்</u><br>1<br>2<br><u>தொழிற்சாலை கழிவுநீர்</u><br>1<br>2 | | | |

**11. ஆ) தொழிற்சாலை கழிவுநீர் உற்பத்தியாகும் மூலத்தின் விபரம் :**

**12. கழிவுநீர் / தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் விவரங்கள்.**

**அ) தனி தொழிற்சாலை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (அ) பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்.**

**ஆ) சுத்திகரிப்பு நிலையத்தின் விபரம்**

| வ எண் | சுத்திகரிப்பு நிலைய அலகுகளின் பெயர் | அலகுகளின் எண்ணிக்கை | அளவுகள் மீட்டரில் |
|---|---|---|---|
| | <u>வடிகால் கழிவுநீர்</u><br>1<br>2<br>3<br>4<br><u>தொழிற்சாலை கழிவுநீர்</u><br>1<br>2<br>3<br>4<br>5<br>6 | | |

**13 (அ) தீங்கிழைக்காத திடக்கழிவுகளின் விவரங்கள்**

| வ. எண் | திடக்கழிவின் தன்மை | அளவு டன்கள்/மாதமொன்றுக்கு | வெளியேற்றும் முறை | சேமித்து வைக்க ஒதுக்கப்பட்டுள்ள இடப்பரப்பு |
|---|---|---|---|---|
| | | | | |

**13. (ஆ) திங்கு விளைக்கும் திடக் கழிவுகளின் விவரங்கள்.**

| வ. எண் | வகையீடு எண் | கழிவின் பெயர் | அளவு டன்கள்/ ஆண்டொன்றுக்கு | வெளியேற்றும் முறை | சேமித்து வெளியேற்றிட ஒதுக்கப்பட்டுள்ள இடப்பரப்பு |
|---|---|---|---|---|---|
| | | | | | |

**14.** ஒட்டுமொத்த சொத்து மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) :

**15.** நீர் மாசு தடுப்பு / கட்டுப்பாடு அளவீடுகள் செலவு மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) :

**16.** நாளொன்றுக்கு வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை (ஒப்பந்த வேலையாட்கள் உட்பட) :

**17.** தொழிற்சாலை துவங்கபடவு ள்ள நாள் :

**18. மக்கள் குடியிருப்பு பற்றிய விவரங்கள் (1 சதுர கி. மீ. சுற்றளவுக்குள் உள்ள அனைத்தும்).**

| வ. எண் | குடியிருப்பின் பெயர் | தூரம் (கிலோ மீட்டரில்) | மக்கள் தொகை |
|---|---|---|---|
| அ) | | | |
| (ஆ) | | | |
| (இ) | | | |
| (ஈ) | | | |
| (உ) | | | |

| | | |
|---|---|---|
| **19** | **அ** அருகில் உள்ள சாலையின் பெயர் (தேசிய நெடுஞ்சாலை / மாநில நெடுஞ்சாலை / மாவட்ட பெரும் சாலைகள் / பிற மாவட்ட சாலைகள்) | |
| | **ஆ** தொழிற்சாலை அமைவிடத்திலிருந்து தூரம் கிலோ மீட்டரில் | |
| **20** | ஒரு கிலோ மீட்டர் சுற்றளவுக்குள் உள்ள நீர் நிலைகள் ஏரி /ஆறுகள்/ வாய்க்கால்கள் போன்றவை பற்றிய விவரங்கள் மற்றும் 5 கீ. மீ. சுற்றளவுக்குள் உள்ள ஆறுகளின் விபரம். | |
| | அ. நீர் ஆதாரத்தின் பெயர் | |
| | ஆ. தொலைவு (மீட்டரில்) | |
| **21** | அ. நில உபயோக வகைப்பாடு<br>ஆ. நில உபயோக சான்றளிப்பு அதிகாரம் | |
| **22** | தொல்லியல் முக்கியத்துவம் பெற்றவை, தேசிய பூங்கா, கொடூர வன உயிரினம், பறவைகள் சரனாலயம், தேசிய கடல் நீர் பூங்கா, வரையறுக்கப்பட்ட காடுகள், சேமக்காடுகள், சதுப்பு நில காடுகள், முதலிய நுட்பப்பகுதிகள் எவையேனும் தொழிற்சாலையிலிருந்து 10 கி. மீ சுற்றளவுக்குள் இருப்பின் அதன் பெயர் மற்றும் தூரம். | |
| **23** | தொழிற்சாலை அமைவிடம் கடற்கறை பகுதியிலிருந்து 1 கி.மீ தொலைவிற்குள் உள்ளதா ? (கடல், நதி முகத்துவாரங்கள், கடல்நீர் பின்னேற்றம்) ஆம் எனில் தொழிற்சாலையிலிருந்து அவற்றின் தூரம் குறிப்பிடுக. | |
| **24** | அனைத்து இயக்குநர்கள் / பங்குதாரர்களின் பெயர், பதவி மற்றும் முழு விலாசம் | |

## உறுதி மொழி

| | |
|---|---|
| 01 | நான் இவ்விண்ணப்பத்தில் அளித்துள்ள / இணைக்கப்பட்டுள்ள தகவல், பட்டியல், விவரங்கள் யாவும் உண்மையானவை என்றும் எந்தவித தகவலையும் மறைக்கவில்லை என்றும் சான்றளிக்கிறேன். மேலும் தவறான தகவல்கள் அளித்தல் மற்றும் விபரங்களை மறைத்தல் போன்ற செயல்கள் 1974–ம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் பிரிவு (42)–ன் படி தண்டனைக்கு உட்பட்டது என்பதையும் நான் அறிவேன். |
| 02 | எனது தொழில் உற்பத்தியில் தயாரிக்கப்படும் பொருள்களில் அல்லது கழிவுகள் வெளியேற்றத்தில் அல்லது அதன் அமைப்பில் / அளவுகளில், மாற்றம் இருப்பின் புதியதாக இசைவாணை பெற விண்ணப்பம் செய்வேன் என உறுதி கூறுகிறேன். |
| 03 | வாரியம் ஒவ்வொரு கால கட்டத்திலும் அளிக்கும் உத்தரவுகளுக்கும் / அறிவுரைகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பேன் என உறுதி கூறுகிறேன். |
| 04 | இசைவாணையில் அளிக்கப்பட்டுள்ள காலக்கெடு முடிய 30 நாட்களுக்கு முன்னதாக செயலாக்க இசைவாணை/புதுப்பித்தலுக்கான இசைவாணை பெற விண்ணப்பம் செய்வேன் என உறுதி கூறுகிறேன்.<br><br>இடம் : விண்ணப்பதாரரின் கையொப்பம்<br><br>தேதி : பெயர் மற்றும் பதவி. |

**சரிபார்க்கும் பட்டியல்**

**புதிய தொழிற்சாலைகள் / விரிவாக்கம் செய்வதற்காக விண்ணபப்பத்துடன் இணைக்க வேண்டிய பின் இணைப்புகள்**

| வ எண் | விபரம் | ஆம் | இல்லை |
|---|---|---|---|
| **A . பொது** | | | |
| 01 | முகப்புகடிதம் (இரு பிரதிகளில்) தொழிற்சாலை செயல்பாடுகள் தொடர்பான தெளிவான குறிப்புகளுடன். | | |
| 02 | தொழிற்சாலை இடம் / தொழிற்சாலை விண்ணபதாரருடைய ஆளுமையில் உள்ளது என்பதற்கு சான்றாக நில விற்பனை பத்திரம் நகல் / வாடகை பத்திரங்கள் அல்லது அதை உறுதி செய்வதற்கான பிற சான்றுகளின் நகல்கள். | | |
| 03 | விண்ணபதாரர் பொதுத்துறை / தனியார் துறையாக இருப்பின் உடன்பாட்டு உறுப்பினர்களின் நகலும் (அ) பதிவுற்ற பங்குதாரர் நிறுவனமாக இருப்பின் பங்குதாரர்கள் பத்திர நகல் போன்றவை. | | |
| 04 | விண்ணபதாரரின் இடம்பற்றிய தரை விளக்கப்படத்தில் வெவ்வேறு செயல் முறைகளுக்கான இயந்திரங்களான கொதிகலன், மின் உற்பத்தி சாதனம் அமைவிடங்கள் தொழி ற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், வெளியே ற்றுதலுக்கான இடம், தொழிற்சாலை எல்லைகள் மற்றும் தீங்கிழைக்கும் மற்றும் தீங்கிழைக்காத கழிவுகளுக்குகான சேமிப்பு தளம் ஆகியனவற்றை குறிக்கவும். | | |
| 05 | தயாரிக்கப்படும் ஒவ்வொரு பொருளுக்கான விரிவான தயாரிப்பு வழிமுறைகள் மற்றும் தயாரிப்பு வழிமுறை வரைபடங்கள். | | |
| 06 | ஒவ்வொரு உற்பத்தி பொருளுக்கான நீர் மற்றும் மூலப்பொருள் சமநிலை விளக்க குறிப்புகளுடன் கூடிய விவர வரைபடம். | | |
| 07 | இடம் அமைப்பு பற்றிய விளக்கபடத்தில், 1 கிலோ மீட்டர் ஆரத்தில் வரும் நீர் நிலைகள், சாலைகள், இருக்கக்கூடிய / அல்லது புதியதாக அமையக்கூடிய குடியிருப்பு பகுதிகள், விவசாய நிலங்கள், முக்கிய சமய வழிபாட்டு இடங்கள், கல்வி நிலையங்கள், பழங்கால நினைவு சின்னங்கள், புராதான மற்றும் தொல்லியல் துறையின் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள், ம ற்றும் நுண் உணர்வு பகுதிகள் மற்றும் அவைகளின் தூரம், (அளவுகளை குறிப்பிட்டு சொல்லக்கூடியதான வரைபடம்). | | |
| 08 | சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் / இயக்குநர், நகர மற்றும் ஊரக திட்டமிடுதல் துறை, உள்ளுர் திட்டக்குழுமம் போன்றவ ற்றிடமிருந்து பெற்ற நில உபயோக சான்றிதழ் நகல். | | |
| 09 | தணிக்கையாளரின் சான்றிதழ் பெற்ற ஒட்டுமொத்த நிகர சொத்து விபர நகல். | | |
| 10 | நிலத்தடி நீர் உபயோகத்திற்கான தடையின்மை விவரங்கள் (தேவைப்படின்) | | |
| 11 | நீர் மற்றும் காற்று சட்டத்தின் கீழ் இசைவாணை கட்டணத்தி ற்குரிய கேட்பு வரைவு காசோலை. (Demand Draft) | | |
| 12 | எல்லா வகை ஆவணங்களும் அவ்தொழிற்சாலையின் உரிமைதாரர் / அங்கீகாரம்பெற்ற நபர் கையொப்பத்துடன் இருத்தல் வேண்டும். | | |
| **B. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் / காற்று மாசு கட்டுப்பாடு அளவீடுகள் (தேவை எனில்)** | | | |
| 13 | தொழிற்சாலைகழிவு நீர் உற்பத்தியாகும் தொழிற்சாலைகள் எனில், தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு செய்வதற்கான கருத்துரு அவசியம். நீர் தேவைக்குரிய விவரக் கூறுகள், அத ற்குரிய மூலம், தொழிற்கழிவு நீர் மூலம், அதன் விவரக்கூறுகள், அக்கழிவுநீரின் சிறப்பியல்பு பண்புகள், சுத்திகரிப்பு முறைமைகள். வெளியேற்றும் வழிமுறைகள், ஒவ்வொரு அலகுக்கும் உரிய வடிவமைப்பு அளவுகோள், விவரங்களுடன் கூடிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் வரைபடம், அமைவிட படம், நீர்ம பகுத்தாய்வு தன்மையின் சிறப்பு குறிப்புகள், மற்றும் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரின் வெளியே ற்றுதலுக்குரிய ஏற்ற அளவீடுகள் போன்றவை தெரிவிக்கப்படவேண்டும். | | |

| | | | |
|---|---|---|---|
| 14 | தொழிற்சாலை வினைமுறைகளினால் காற்று மாசுக்குரிய உமிழ்வுகள் ஏதாவது வெளிப்படுமாயின் அக்காற்று மாசுக்களை கட்டுப்படுத்த இத்துடன் அவசியம் கருத்துரு அளித்திடல் வேண்டும். அதில் பயன்படுத்தகூடிய எரிபொருள் பற்றிய விவரங்கள், உமிழ்வுகளின் ஆதாரமும், சிறப்பியல்பு பண்புகள், அடத்தி மற்றும் மாசின் தரம் போன்றவற்றை கணக்கில் கொண்டு வடிவமைப்பு வரைபடம், உத்தேசித்துள்ள காற்று மாசு தடுப்பு / கட்டுப்பாடு கருவிகள் மற்றும் புகைபோக்கிக்கு உரியது போன்றவை அளித்திடல் வேண்டும். துர்நாற்றம் ஏற்பட காரணமாயிருக்கும் வினைமுறைகளுக்கு குறிப்பிட்ட துர்நா ற்றம் கட்டுப்படுத்தும் அளவீடுகள் போன்றவற்றிற்குரிய கருத்துரு அளித்திடல் வேண்டும். | | |
| 15 | ஒலி மாசு ஏற்பட இருப்பின் அது ஏற்பட இருக்கும் இடத்தில் அவ் ஒலிமாசினை கட்டுப்படுத்த வேண்டிய அளவீடுகள் பற்றிய விபரம் அளித்திட வேண்டும். | | |
| 16 | தீங்கிழைக்காத திடக்கழிவு உற்பத்தியாகும் எனில் அதன் தொடர்புடைய ஆதார விபரம், மற்றும் திடக்கழிவின் அளவு, சேகரிக்கும் முறை, அதனை சுத்திகரித்தல், மற்றும் வெளியே ற்றுதலுக்காக வரையறுக்கப்பட்ட இடம் அதனை குறித்த விவரம் அளித்திடல் வேண்டும். | | |
| 17 | தீங்கிழைக்கும் திடக்கழிவு உற்பத்தியாகும் எனில் அதன் தொடர்புடைய ஆதார விபரம், மற்றும் அதன் அளவு, சேகரிக்கும் முறை மற்றும் அதனை சுத்திகரித்தல் மற்றும் வெளியேற்றுதல் குறித்த விபரம் ஆகியன அளித்திடல் வேண்டும். | | |
| **<u>C. தீங்கிழைக்கும் இரசாயனகள் கையாளுவது (தேவை எனில்)</u>** | | | |
| 18 | முலப்பொருளாக தீங்கிழைக்கும் இரசாயனகள் பயன்படுத்தப்படும் எனில் அதற்குரிய "பொருள் பாதுகாப்பு தகவல் ஆவணத்தாள்" (MSDS) அவசியம் ஒவ்வொரு பொருளுக்கும் அளித்திடல்வேண்டும். தீங்கிழைக்கும் இரசாயனகள் கையாளும் அளவுகள் அதன் வரம்பு எல்லையை ஒன்று அல்லது சேர்ந்து அதிகமாக போகும் சமயத்தில் தயாரித்தல், சேமித்தல், மற்றும் தீங்கிழைக்கும் இரசாயனங்களுக்கான இறக்குமதி விதிகள்படி இம்மதிப்பீடு அறிக்கை, அவசரகால நிலையில் தொழிற்கூடத்தின் உட்புறம் ம ற்றும் வெளிப்புறத்தில் எதிர்கொள்ள வேண்டிய நடவடிக்கை பற் றிய திட்டம் ஆகியன அளித்திடல் வேண்டும். | | |
| 19 | தீங்கிழைக்கும் இரசாயனகள் போக்குவரத்து செய்யப்படுவதாக இருந்தால் போக்குவரத்துக்குரிய இரசாயனகள் பற்றிய விவரம் போக்குவரத்து முறை, அதன் பாதுகாப்பு அளவீடுகள் ஆகிய விபரங்களை அளித்திடல் வேண்டும். | | |
| **<u>D. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை மற்றும் கடற்கறை ஒழுங்குமுறை மேலாண்மை அறிவிக்கையின் கீழ் வரும் தொழிற்சாலைகள்.</u>** | | | |
| 20 | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின் கீழ் எந்த ஒரு தொழிற்சாலையும் வருமாயின், மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம், (அ) மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அதிகார அமைப்பிடமிருந்து பெற்ற நிலைக்குறிப்பு ஆவணத்தை சமர்பிக்க வேண்டும், மற்றும் மேற்படி நிலைக்குறிப்புகள் அடிப்படையில் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை ஒன்றினை தயார் செய்து அளித்திடவும் வேண்டும். | | |
| 21 | கடற்கறை ஒழுங்குமுறை மேலாண்மையின் கீழ் வருமாயின் அத ற்குரிய விவரங்கள் அளித்திடல் வேண்டும். | | |
| 22 | பொது சுத்திகரிப்பு அமைப்புடன் ஒப்பந்தம் இருப்பின் அத ற்குரிய தகவல் அளித்திட வேண்டும். | | |

விண்ணப்பதாரரின் கையொப்பம்
பெயர் மற்றும் பதவி

**நீர் சட்ட விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்வதற்கான விவரங்கள் / விளக்கங்கள் தேவை என கருதப்பட்டும் இனங்களுக்கு மட்டுமே விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| **பொதுவான விளக்கங்கள்** | |
| 1 | விண்ணப்பம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருப்பதோடு, இணைப்பில் வழங்கப்பட்டுள்ள சரிபார்க்கும் பட்டியலில் உள்ளபடி அனைத்தும் இணைக்கப்பட்டிருக்கவேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் ஏற்கபடாது. |
| 2 | அனைத்து இணைப்புகளிலும் தொழிற்சாலையின் உரிமையாளர் கையொப்பமிடவேண்டும். |
| 3 | தொழிற்சாலையின் உரிமையாளர் அல்லது தொழிற்சாலையின் சார்பாக அங்கீகரிக்கப்பட்டவர்கள் மட்டுமே விண்ணப்பத்தை தாக்கல் செய்யவேண்டும். |
| 4 | தேவையான அனைத்து விவரங்களும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவேண்டும். கேட்கப்பட்டிருக்கும் தகவல்கள், தொழிற்சாலைக்கு சம்மந்தமில்லை எனில் "சம்மந்தமில்லை" என தெரிவிக்க வேண்டும். |
| 5 | இரு பிரதிகளாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும். |
| 6 | தவறான தகவல்களை / விவரங்களை வழங்குவதும், தகவல்களை மறைப்பதும், 1974ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் மற்றும் 1981ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டங்களின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். |
| 7 | விண்ணப்ப படிவத்தில் வழங்கப்பட்டுள்ள இடம் போதுமானதாக இல்லையெனில் கோரப்பட்டுள்ள விவரங்களை இணைப்பாக, விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள படிவத்தில் வழங்க வேண்டும். |
| **இன வாரியான விவரங்கள்** | |
| **8** | **வரிசை எண். 1 –** இதில் விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரியினை அளிக்க வேண்டும். விண்ணப்பதாரர், தொழிற்சாலையின் உரிமையாளராகவோ (அல்லது) லிமிடெட் கம்பெனியாக இருப்பின், கம்பெனியின் இயக்குநர்கள் அங்கீகரிக்கும் நபரோ (அல்லது) பங்குதாரர் / உரிமையாளர்களின் தொழிற்சாலையாக இருப்பின், பங்குதாரர் / உரிமையாளரால் அங்கீகரிக்கப்பட்ட நபராக இருக்கவேண்டும். தொழிற்சாலை அல்லது தொழில் வளாகத்தின் "உரிமையாளர்'" என்பவர் தொழிற்சாலை அல்லது தொழில் வளாகத்தின் முழுமையான அதிகாரம் படைத்தவராகவும் தொழிற்சாலையின் முழுமையான உரிமையாளராகவும் இருப்பவர் ஆவார்.<br>அங்கீகரிக்கப்பட்ட நபர்கள் அதற்குரிய கடித நகலை இணைக்க வேண்டும். |
| **9** | **வரிசை எண். 2 –** இங்கு தொழிற்சாலை / நிறுவனம் /ஆலை எந்த பெயரில் தொழில் புரிகிறது என்பதை குறிப்பிடவேண்டும். விண்ணப்பதாரருக்கு இதே பெயரில் தமிழகத்திற்குள் ஒன்றிற்கு மேற்பட்ட தொழிற்சாலை இருப்பின், பெயரில் வேறுபாடு காட்டப்படவேண்டும். (உதாரணமாக, நிறுவனம் 1, நிறுவனம் 2, இரசாயன பிரிவு, மின் பிரிவு என்பதாக குறிப்பிட வேண்டும்). |
| **10** | **வரிசை எண். 3 –** இங்கு தொழிற்சாலை அமையவிருக்கும் இடம் அல்லது தொழிற்சாலை அமைந்துள்ள இடம் அதன் நில அளவை எண், கிராமம், வட்டம் மற்றும் மாவட்டம் பெயர் விவரங்களை வழங்க வேண்டும். தயவுசெய்து தொழிற்சாலை அமைந்துள்ள / அமையவுள்ள இடத்தின் அனைத்து நிலஅளவை எண்களை வழங்க வேண்டும். விண்ணப்ப படிவத்தில் போதுமான இடம் இல்லை எனில் இணைப்பாக வழங்க வேண்டும். மேற்படி, அனைத்து நில அளவை எண்களை வழங்க வேண்டும். விண்ணப்ப படிவத்தில் போதுமான இடம் இல்லை எனில் இணைப்பாக வழங்க வேண்டும். மேற்படி, அனைத்து நிலை அளவை எண்களும், நிலப் பத்திரத்தில் உள்ள நில அளவை ஒத்துயிருக்கவேண்டும். நிலத்தின் குத்தகைதாரராக இருப்பினும், அனைத்து நில அளவை எண்களையும் வழங்க வேண்டும். விண்ணப்பத்தோடு அனைத்து நிலப்பத்திர நகல்களையும் இணைக்க வேண்டும். குத்தகைதாரராக இருப்பின் குத்தகைக்கான இடத்தின் அனைத்து நிலஅளவைகள் மற்றும் குத்தகைக்கான தொகை அடங்கிய பத்திர நகலையும் இணைக்க வேண்டும். |

| | |
|---|---|
| 11 | **வரிசை எண். 4 –** இங்கு தொழிற்சாலை அமைந்துள்ள இடம் அல்லது அமையவிருக்கும் இடத்தின் உள்ளாட்சி அமைப்பின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். |
| 12 | **வரிசை எண். 5 –** இங்கு தொழிலகம் / பங்குதாரர் / உரிமையாளர் ஆகியோருக்கு நிலம் சொந்தமாக இருப்பின் ''சொந்தம்'' என குறிப்பிடவேண்டும். இடம் குத்தகைக்கு எடுத்திருப்பின் "குத்தகை" என குறிப்பிடவேண்டும்.<br>1. கட்டுமானப்பகுதி பரப்பளவானது கட்டிடங்களின் பரப்பளவு, சாலைகள் மற்றும் நடைபாதைகளின் பரப்பளவுகளை உள்ளடக்கியதாகும். கட்டுமானப்பகுதி பரப்பளவு சதுர மீட்டரிலிருந்து ஹெக்டேருக்கு மாற்ற 10000–த்தால் வகுக்கவும் (உதாரணமாக கட்டுமானப்பகுதி பரப்பளவு 200 சதுர மீட்டராக இருப்பின், அதனை 0.02 ஹெக்டேர் என குறிப்பிடவேண்டும்.)<br>2. நீர்பாசன பகுதி சுத்திகரிக்கப்பட்ட தொழிற்சாலைக் கழிவுநீரைக் கொண்டு தொழிற்சாலைக்கு உள்ளேயோ மற்றும் வெளியேயோ பயிர் பாசனம் செய்யப்படுமாயின் அவ்விடத்தின் பரப்பளவை குறிப்பிட வேண்டும்.<br>3. **பசுமை வளர்ப்பு பரப்பளவு:** தொழிற்சாலைக்குள் புல்விரிப்பு தோட்டம் மற்றும் மரம் வளர்ப்பிற்கான பரப்பளவை குறிப்பிடவேண்டும்.<br>4. **திடக்கழிவுகள் சேகரிப்பு பரப்பளவு**: தீங்கு விளைவிக்கும் மற்றும் தீங்கு விளைவிக்காத திடக்கழிவுகள் தற்காலிகமாக சேகரித்து வைக்கும் இடம் / நிரந்தரமாக வெளியேற்றும் இடத்தின் பரப்பளவை குறிப்பிடவேண்டும். |
| 13 | **வரிசை எண். 6 –** இங்கு உபயோகப்படுத்தப்படும் மூலப் பொருட்களின் விவரங்கள், அதன் அளவுகளை வழங்கிடவேண்டும். விண்ணப்பப்படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள இடம் போதுமானதாக இல்லையெனில், கோரப்பட்டுள்ள விவரங்களை இணைப்பாக விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள படிவ முறைகளில் வழங்கவேண்டும். **<u>முதன்மைபயன்பாடு</u>**<u>:</u> இங்கு மூலப் பொருட்கள் எதற்காக உபயோகப்படுத்தப்படுகின்றது என்பதை தெரிவிக்க வேண்டும். (<u>உதாரணமாக:</u> அமோனியா: யூரியா தயாரிக்க, NaOH: எண்ணைப்பசையை நீக்கிட). |
| 14 | **வரிசை எண்: 7 –** இங்கு எரிப்பொருட்கள் உபயோகிப்பது குறித்த விவரங்களை நாளொன்றிற்கு எத்தனை டன் என குறிப்பிடவும். "பயன்படுத்தப்படும் பகுதி" என்ற இடத்தில் பயன்படுத்தப்படுகின்ற இடத்தை குறிக்கவும். (உதாரணமாக: கொதிகலன் / டீசல் ஜெனரேட்டர் / அடுப்பு போன்றவை). எரிபொருளின் உற்பத்தியாளர் வழங்கியுள்ள எரிபொருள் பற்றிய விவரங்களின் நகல் அனைத்தையும் இணைக்கவும். |
| 15 | **வரிசை எண்: 8 –** இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்கள் / உப உற்பத்தி பொருட்கள் / இடை நிலை உற்பத்தி பொருட்களின் பெயர் மற்றும் அளவுகளை குறிக்கவும். உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களின் அளவுகள், மூலப்பொருட்கள் குறித்து வழங்கப்பட்ட அளவுகளிலேயே இருத்தல் வேண்டும். (அதாவது மூலப்பொருட்கள் டன் / நாளொன்றிற்கு என வழங்கப்பட்டிருப்பின், உற்பத்தி பொருட்களின் அளவுகளும் டன் / நாளொன்றிற்கு என இருத்தல் வேண்டும்). விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள இடம் போதவில்லை எனில், விவரங்களை இணைப்பாக கேட்கப்பட்டுள்ள படிவ முறைகளில் வழங்கவும். தொழிற்சாலை, தீங்கு விளைவிக்கக் கூடிய இரசாயனப் பொருட்கள் உற்பத்தி / சேமிப்பு / கையாளுதல் செய்ய உத்தேசித்திருப்பின், இரசாயனப் பொருட்கள் பற்றிய பொருட்கள் பாதுகாப்பு விவரங்கள் அட்டையினை வழங்க வேண்டும். தீங்கு விளைவிக்கக்கூடிய இரசாயனப் பொருட்கள் உற்பத்தி, சேமிப்பு மற்றும் இறக்குமதி விதிகளில் வழங்கப்பட்டுள்ள அளவீடுகளுக்கு மேல் இருப்பின் சட்டத்திட்டங்களுக்கு ஏற்ப கீழ்கண்ட விவரங்களை வழங்கவும். இடர் மதிப்பீட்டு அறிக்கை / அவசர கால நிலையில் தொழிற்சாலை வளாகத்திற்குள் ஏற்படும் விபத்துக்களை எதிர்கொள்ளும் திட்டம் / தொழிற்சாலைக்கு வெளியில் ஏற்படும் விபத்துக்களை எதிர்கொள்ளும் திட்டம் குறித்த அறிக்கையினை வழங்க வேண்டும். |

| | |
|---|---|
| 16 | **வரிசை எண்: 9 –** இங்கு அனைத்து உற்பத்தி பொருட்களுக்குமான செய்முறைகளை வழங்கவும். விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள இடம் போதவில்லை எனில் இணைப்பாக வழங்கவும். உற்பத்தி செய்யப்படுகின்ற ஒவ்வொரு பொருட்களுக்கான விரிவான செயல்முறை குறிப்பு, செயல்முறை அட்டவணை, கழிவுநீர் உற்பத்தியாகும் பகுதிகள், வாயுக்கள் உற்பத்தியாகும் பகுதிகள், ஒலி ஏற்படுத்தும் பகுதிகள் மற்றும் மூலப்பொருட்கள் மற்றும் நீர் பயன்பாடு குறித்த நிலுவைப் பட்டியல்கள் வழங்கவும். |
| 17 | **வரிசை எண்:10 (அ) –** இங்கு நீர் ஆதாரத்தை குறிப்பிடவும். (அதாவது திறந்த கிணறு, ஆழ்துளை கிணறு, ஆறு, கால்வாய், மாநகரம் மூலம் பெறப்படும் நீர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பெறப்படும் நீர், உள்ளாட்சிகள் வழங்கும் நீர், தமிழ்நாடு சிறு தொழிற்சாலைகள் மேம்பாட்டு கழகம் வழங்கும் நீர் (SIPCOT), சிறு தொழிற்சாலைகள் வளர்ச்சி கழகம் வழங்கும் நீர், தனியார் போன்றவை). தொழிற்சாலை அமைந்துள்ள இடம் / அமையவிருக்கும் இடம், பொதுப்பணி துறையால் அபாயகரமான மண்டலம் / பகுதியாக அபாயகரமான மண்டலப் பகுதிகளில் இருப்பதோடு, நீர் ஆதாரம், நிலத்தடி நீராக இருப்பின், நிலத்தடி நீர் எடுப்பதற்கு வழங்கப்பட்ட அனுமதியின் நகலினை இணைக்கவும். மற்றவர்கள் நீர் எடுப்பது/ பெறுவது குறித்து வழங்கப்பட்ட அனுமதி நகலை இணைக்கவும். |
| 18 | **வரிசை எண். 10 (ஆ) (i) –** இங்கு கொதிகலனுக்கு தேவையான நீர், தொழி ற்சாலையில் குளிரூட்டுவதற்கான நீர் தேவை, சுரங்கத்தில் தெளிப்பதற்கான நீர் தேவைகளை குறிப்பிடவேண்டும். |
| 19 | **வரிசை எண். 10 ஆ** (ii) – இங்கு அன்றாட குடிநீர் தேவையினை குறிப்பிடவேண்டும். (குடிநீர், கழிவறை, உணவு கூடம், தங்கும் விடுதி முதலியவற் றிற்கு தேவையானவை). |
| 20 | **வரிசை எண். 10 (ஆ)** (iii) **–** இங்கு சுலபமாக சிதையக்கூடிய கழிவுநீர் உ ற்பத்தியாகும் பிரிவுகளில் பயன்படுத்தப்படும் நீரின் அளவை குறிப்பிடவேண்டும் (கழிவுநீரில் இரசாயன முறையில் சிதைக்க தேவையான ஆக்சிசன் அளவுக்கும், உயிரியியல் முறையில் சிதைக்க தேவையான ஆக்சிசன் அளவின் விகிதாசாரம் (Ratio) இரண்டிற்கும் குறைவாக இருத்தல்). |
| 21 | **வரிசை எண். 10 (ஆ)** (iv) **–** இங்கு சுலபமாக சிதையாத மற்றும் அபாயகரமான கழிவுநீர் உற்பத்தியாகும் பிரிவுகளில் பயன்படுத்தப்படும் நீரின் அளவை குறிப்பிடவேண்டும். |
| 22 | **வரிசை எண். 11 (அ) –** இங்கு நாளொன்றிற்கு உற்பத்தியாகும் அல்லது உத்தேசமாக உற்பத்தியாகக் கூடிய (உத்தேசிக்கப்பட்ட தொழிற்சாலை) கழிவு நீர் / தொழிற்சாலை கழிவு நீரின் அளவுகள், அதனை வெளியேற்றும் முறை (பசுமை போர்வை வளர்ப்பிற்கு அல்லது சூரிய ஒளி மூலம் ஆவியாகக் கூடிய தொட்டிகளில் வெளியேற்றம் அல்லது மறு பயன்பாட்டிற்கு உபயோகித்தல்) மற்றும் நிலத்தில் வெளியேற்றுவதற்கான நிலத்தின் பரப்பளவை (நிலத்தில் வெளியேற்றினால்) குறிப்பிடவேண்டும். |
| அ. | நிலத்தில் விவசாயத்திற்கு / தோட்டத்திற்கு வெளியேற்ற உத்தேசித்திருந்தால், நாளொன்றுக்கு ஒரு ஹெக்டேரில் **35** கிலோ லிட்டர் வெளியேற்றம் என்ற அடிப்படையில் நிலத்தின் பரப்பளவு ஒதுக்கப்பட வேண்டும். |
| ஆ. | சூரிய ஒளியில் ஆவியாகக் கூடிய படுகையில் வெளியேற்றுவதாக இருப்பின், சூரிய ஒளியில் ஆவியாகக் கூடிய படுகையின் பரப்பளவானது நாளொன்றிற்கு **4.5** மில்லி மீட்டர் அளவு ஆவியாகும் என்ற அடிப்படையில் கணக்கிட்டு அமைக்க வேண்டும். |
| இ. | தொழிற்சாலை கழிவுநீரை கடலில் வெளியேற்றுவதாக இருப்பின், இதற்கென அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களால் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில் கண்டறியப்பட்ட சரியான இடத்தை குறிக்கவும். மேலும் நடத்தப்பட்ட ஆய்வறிக்கை இணைக்க வேண்டும். |
| ஈ. | தொழிற்சாலை கழிவுநீரை பாதாளச் சாக்கடையில் வெளியேற்றுவதாக இருப்பின், பாதாளச் சாக்கடையினை பராமரிக்கும் உரிய நிறுவனத்திடம் முறையான அனுமதி பெற வேண்டும். |

| | |
|---|---|
| உ. | தொழிற்சாலையானது கழிவுநீரை பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலோ அல்லது தொழிற்சாலைக்கு சம்பந்தமான சகோதர தொழிற்சாலையின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் வெளியேற்றுவதாக இருப்பின், பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் / சகோதர தொழிற்சாலைகளிடமிருந்து அனுமதி கடிதம் பெற வேண்டும். |
| ஊ. | தொழிற்சாலை, சுத்திகரிக்கப்பட்ட தொழிற்சாலை கழிவுநீரை மறுசுழற்சி செய்ய இருப்பின் அதற்கான தொழிற்நுட்ப சாத்தியக்கூறு குறித்த விரிவான அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். |
| எ. | தொழிற்சாலை சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை / தொழிற்சாலை கழிவுநீரை மற்றொரு தொழிற்சாலையில் / இடத்தில் மறுசுழற்சி செய்ய இருப்பின், இதனை பயன்பாடு செய்பவரிடமிருந்து அனுமதி கடிதம் பெறுவதோடு தொழிற்நுட்ப சாத்தியக்கூறு குறித்த அறிக்கையினையும் சமர்ப்பிக்கவேண்டும். |
| 23 | **வரிசை எண். 11 (ஆ)** – இங்கு தொழிற்சாலை கழிவுநீர் உற்பத்தியாகும் இடத்தை குறிப்பிடவேண்டும். |
| 24 | **வரிசை எண். 12 (அ)** – இங்கு தொழிற்சாலை தனியாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் / தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தது / அமைக்க உத்தேசித்துள்ளது அல்லது பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய உறுப்பினராக இருப்பது குறித்த விவரம் மற்றும் பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பெயரையும் குறிப்பிடவேண்டும். |
| 25 | **வரிசை எண். 12 (ஆ)** – இங்கு சுத்திகரிப்பு நிலைய தொட்டிகளின் பெயர்கள், அளவுகள், தொட்டிகளின் எண்ணிக்கை மற்றும் மின்சாதனங்களின் குதிரை சக்தி போன்ற விவரங்களை குறிப்பிடவேண்டும். சுத்திகரிப்பு நிலையம் / தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் குறித்த விரிவான அறிக்கை வரைபடம், குறுக்குவெட்டு வரைபடம், தொட்டிகளின் அளவுகள் மற்றும் இயந்திரங்களின் விவரங்கள் குறித்த விரிவான அறிக்கையினையும் இணைக்கவேண்டும். |
| 26 | **வரிசை எண். 13 (அ)** – இங்கு (இயங்குகின்ற தொழிற்சாலையாக இருப்பின்) தீங்கு விளைவிக்காத திடக்கழிவுகளின் பெயர்கள் (காகிதம், பிளாஸ்டிக், சாம்பல் போன்றவை), திடக்கழிவுகளின் அளவுகள் மற்றும் உத்தேசிக்கப்பட்ட திடக்கழிவுகள் (உத்தேசிக்கப்பட்ட தொழிற்சாலையாக இருப்பின்) எவ்வாறு வெளியேற்றப்படுகின்றது (இயங்கும் தொழிற்சாலையாக இருப்பின்) அல்லது எவ்வாறு வெளியேற்றப்படும் (உத்தேசிக்கப்பட்ட தொழிற்சாலையாக இருப்பின்) மற்றும் சேகரிப்பு / வெளியேற்றத்திற்கான இடத்தின் பரப்பளவு போன்ற விவரங்களை குறிப்பிடவேண்டும். |
| 27 | **வரிசை எண். 13 (ஆ)** – இங்கு தீங்கு விளைவிக்கும் திடக்கழிவுகளின் பெயர் மற்றும் உற்பத்தியாகும் அளவீடுகள், இயங்கும் தொழிற்சாலையாக இருப்பின், உத்தேசிக்கப்பட்ட அளவீடுகள் விவரம், உத்தேசிக்கப்பட்ட தொழிற்சாலையாக இருப்பின், எவ்வாறு வெளியேற்றப்படும், சேகரிப்பு / வெளியேற்றத்திற்கான இடத்தின் பரப்பளவு போன்ற விவரங்கள் குறிப்பிடவேண்டும். 2008ஆம் ஆண்டின் தீங்கு விளைவிக்கும் கழிவுகள் (மேலாண்மை, கையாளுதல் மற்றும் எல்லை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகளை மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் வலைதளத்தை பார்க்கவும் (www.envfor.nic.in). தீங்கு விளைவிக்கும் கழிவுகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் இவ்விதிகளின் கீழ் அங்கீகாரம் பெற தனியாக விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் மாவட்ட அலுவலகங்களில் கிடைக்கும். |
| 28 | **வரிசை எண். 14** – இங்கு ஒட்டுமொத்த சொத்து மதிப்பு என்பது நிலம், கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் இதர அசையா சொத்துக்களின் விவரங்களைக் குறிப்பிடவேண்டும். இயங்குகின்ற தொழிற்சாலைகள் மேற்கூறிய விவரங்களை நிலைநிறுத்த கடைசியாக இறுதி செய்யப்பட்ட கணக்கு வழக்குகளின் அறிக்கை அல்லது தணிக்கையாளரிடம் (ஆடிட்டரிடம்) பெறப்பட்ட சான்றிதழ் நகலை இணைக்க வேண்டும். தொழிற்சாலை, வாடகை நிலத்திலோ அல்லது கட்டிடத்திலோ அல்லது வாடகை கட்டிடம் மற்றும் நிலத்திலோ இயங்கினால், அதற்கான கட்டிடம் மற்றும் நிலத்தின் மொத்த முதலீட்டு தொகையானது, 20 வருடத்தின் வாடகைத் தொகையாகும். (உதாரணமாக: மாத வாடகை கட்டணம் ரூ.10,000 மாக இருப்பின், நிலம் மற்றும் கட்டிடத்தின் மொத்த முதலீட்டு தொகையாக, மாதந்திர மொத்த குத்தகை கட்டணம் 10000 x 12 மாதம் x 20 வருடம் = ரூ. 24,00,000 என குறிப்பிடவேண்டும்). |

| | |
|---|---|
| 29 | **வரிசை எண். 15 –** இங்கு கழிவுநீர் / தொழிற்சாலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (இயந்திரங்கள் உட்பட) நிர்மானிப்பதற்காக தேவைப்படும் தொகையினை குறிப்பிடவேண்டும். |
| 30 | **வரிசை எண். 17 –** இங்கு தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்ட தேதியினை குறிப்பிடவேண்டும். இயங்குகின்ற தொழிற்சாலையாக இருப்பின், தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்ட தேதிக்கான ஆதாரத்தை குறிப்பிடவேண்டும், உத்தேசிக்கப்பட்ட தொழிற்சாலையாக இருப்பின், தொழிற்சாலையினை ஆரம்பிக்க உத்தேசித்துள்ள தேதியினை குறிப்பிடவேண்டும். |
| 31 | **வரிசை எண். 18 –** இங்கு தொழிற்சாலையினை சுற்றியுள்ள குடியிருப்புகள், சாலைகள், நீர்நிலைகள், பாதுகாப்பு காடுகள், மாநில எல்லை மற்றும் தொழிற்சாலையிலிருந்து ஒரு கிலோ மீட்டரில் உள்ள இதர முக்கிய விவரங்கள் அடங்கிய வரை படத்தினை இணைக்கவும். தொழிற்சாலை மாநில எல்லையிலிருந்து 10 கிலோமீட்டர் தூரத்திற்குள் அமைந்திருந்தால், தொழிற்சாலை, மாநில எல்லையிலிருந்து சராசரியாக எவ்வளவு தூரத்தில் உள்ளது என்பதை தெரிவிக்கவும். |
| 32 | **வரிசை எண். 20 –**<br>1 இங்கு நீர்நிலைகளான ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் பற்றிய விவரங்களை வழங்கவும்.<br>2. சிலவகையான தொழிற்சாலைகள் சிலகுறிப்பிட்ட நீர்நிலைகள் ஆறுகளிலிருந்து 1 கிலோ மீட்டர் மற்றும் 5 கிலோ மீட்டருக்குள் அமைக்க தடை உள்ளது என்பதை அறியவும். அரசாணை 213 மற்றும் 127–யினை பார்க்கவும். (www.tncb.gov.in வளைதளத்தை பார்க்கவும்). தடைசெய்யப்பட்ட இடத்திற்கு சற்று வெளியே தொழிற்சாலையினை அமைக்கவேண்டும் எனில் (உதாரணமாக சில நீர்நிலைகளிலிருந்து 1.5 கிலோமீட்டர் தூரத்திலோ, சில ஆறுகளிலிருந்து 5.5 கிலோ மீட்டர் தூரத்திலோ தொழிற்சாலைகள் அமைய இருந்தால்) அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களால் அளவீடுகள் செய்யப்பட்டு தொழிற்சாலைக்கும் நீர்நிலைகளுக்குமான சரியான தூரத்தினை latitude மற்றும் longitude விவரங்களுடன் சான்றிதழ் இணைக்க வேண்டும். |
| 33 | **வரிசை எண். 21 (அ) மற்றும் (ஆ) –** இங்கு உரிய அலுவலகங்களால் வகைப்படுத்தப்பட்ட நில உபயோக வகைப்பாட்டினை குறிப்பிடவேண்டும். உரிய அலுவலகங்களால் வழங்கப்பட்ட நிலவகைப்பாடு சான்றிதழின் நகலினை இணைக்கவும் (சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், இயக்குநர், நகர வளர்ச்சி குழுமம், உள்ளூர் நகர வளர்ச்சி குழுமம்) நிலவகைப்பாடு ஏதும் செய்யப்படவில்லை எனில், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் / இயக்குநர் நகர வளர்ச்சி குழுமம் / உள்ளூர் நகர வளர்ச்சி குழுமத்திடமிருந்து பெறப்பட்ட அத்தாட்சியினை இணைக்கவும். |
| 34 | **வரிசை எண்.23 –** இங்கு கடற்கரையிலிருந்து / கடல்நீர் பின்னேற்றத்திலிருந்து (backwater) தொழிற்சாலை அமைந்துள்ள இடத்தின் சரியான தூரத்தை குறிப்பிடவேண்டும். தொழிற்சாலையானது கடற்கரையிலிருந்து / கடல்நீர் பின்னேற்றத்திலிருந்து (backwater) ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்குள் இருப்பின் அண்ணா பல்கலைக்கழகத்திடமிருந்து, தொழிற்சாலை, கடலோர சீரமைப்பு பகுதியில் உள்ளதா இல்லையா என்பது குறித்த சான்றிதழைப் பெற வேண்டும். தொழிற்சாலையானது கடலோர சீரமைப்பு பகுதியிலிருந்து, தொழிற்சாலையின் நடவடிக்கையானது அனுமதிக்கப்பட்ட நடவடிக்கையாக இருப்பின், கடலோர சீரமைப்பு சான்றிதழை தொழிற்சாலையானது உரிய குழுமத்திடமிருந்து பெற வேண்டும். |
| 35 | **வரிசை எண். 24 –** இங்கு லிமிடெட் கம்பெனியாக இருப்பின் தொழிற்சாலையின் இயக்குநர்கள் பெயர் மற்றும் முகவரி மற்றும் பங்குதாரர் நிறுவனமாக இருப்பின் பங்குதாரர்களின் பெயர் மற்றும் முகவரியினை வழங்கவும். லிமிடட் கம்பெனியாக இருப்பின் MoA–ன் நகல் மற்றும் பங்குதாரர் நிறுவனமாக இருப்பின் பங்குதாரர்களின் ஒப்பந்த நகலை இணைக்கவும். |